2011 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள் 5-ஆவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழகத்தில் இதுவரையில் மீனவ மக்களுக்கு எந்த ஆட்சிக் காலத்திலும் செய்யப்படாத பல நல்ல காரியங்களை மீனவர்களுடைய வாழ்வின் முன்னேற்றத்திற்காகச் செய்து வருகின்றார்கள். குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழகத்தில் நம்முடைய வரலாற்று முதல்வர் ஐயா கலைஞருடைய ஆட்சியில், கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் துறைமுகத்தில் ரூபாய் 27 கோடியே 10 இலட்சம் செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கின்ற பணி வேகமாக நடைபெற்று வருகிறது.

அதேபோல, கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்பட்டணத்தில், ரூ.40 கோடி செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கின்ற பணி விரைவாக நடைபெற்று வருகிறது. அதேபோல, Boot system-ல் முட்டம் மீன்பிடித் துறைமுகம், ரூ.42 கோடி செலவில் அமைக்கின்ற பணி நடைபெற்று வருகிறது. அதேபோல, கன்னியாகுமரி மாவட்டத்தில் ராஜாக்கமங்கலம்துறையில், ரூ.36 கோடியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பழையாறு, மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணிகளுக்காக டெண்டர் விடப்பட்டு இன்னும் சில நாட்களுக்குள் அந்தப் பணிகள் தொடங்கப்பட உள்ளன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

பால் குளிரூட்டும் நிலையம்

*117008—திரு. ஓ.கே. சின்னராஜ்:

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 ஜனவரி 11

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, தாயனூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, தாயனூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும்பொருட்டு, மைய அரசிடமிருந்து நிருவாக அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போதைய சூழ்நிலையில் பால் குளிரூட்டும் நிலையங்களுக்குப் பதிலாக பால் குளிர்விப்பான்கள் அமைப்பதற்கு அரசாணை வெளியிட்டபின் அதனடிப்படையில் பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.

முற்பகல் 10-50

திரு. ஓ.கே. சின்னராஜ்: மேட்டுப்பாளையம் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள ஒரு பகுதி. அந்தப் பகுதி முழுவதும் விவசாயத்தை மேற்கொண்டு வாழ்கிற மக்கள், மலைவாழ் மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் என்று அதிகமான மக்கள் வாழ்கின்றார்கள். அந்தப் பகுதியில் உள்ள பெரும்பாலான மக்கள் ஆடு, மாடுகளை வளர்த்து தங்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்கிறார்கள். அந்த வகையிலே அங்கு வாழ்கின்ற மக்கள் உற்பத்தி செய்கின்ற பால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம்மூலமாகக் கொள்முதல் செய்யப்படுகிறது. அப்படிக் கொள்முதல் செய்யப்படுகின்ற பால் 70 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கோவையில் அமைந்துள்ள ஆவின் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அப்படி எடுத்துச் செல்லப்படுகின்றபொழுது பல்வேறு இடங்களில் கொள்முதல் செய்யப்படுகின்ற பால் நீண்ட நேரமாகின்ற காரணத்தினாலே கெட்டுப்போவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. அப்படி பால் கெட்டுப்போவதால் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அதனைக் கருத்தில்கொண்டு—தாயனூரைச் சுற்றி ஏறத்தாழ பதினெட்டுக்கும் மேற்பட்ட கூட்டுறவு பால்

2011 ஜனவரி 11]

உற்பத்தியாளர்கள் சங்கங்கள் இருக்கின்றன. அவற்றில் பத்தாயிரம் லிட்டருக்கும் மேல் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. அப்படி உற்பத்தி செய்யப்படுகின்ற பாலினை, தாயனூரை மையமாகக் கொண்டு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்து எதிர்காலத்தில் பால் கெடாமல் வைத்திருப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தலைவர் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஐந்தாவது முறையாக நடைபெறுகின்ற இந்த ஆட்சிக் காலத்தில்தான் பால் குளிர்விப்பான்கள் புதியதாக அமைக்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது கோயம்புத்தூரைப் பொறுத்தளவிலே மத்திய அரசு நிதியுதவியுடன், இத்திட்டத்தில் 2009-2010, 2010-2011 ஆகிய இந்தக் காலக்கட்டத்தில் 320.45 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மத்திய அரசினுடைய ஆணை 31-3-2010-ல் பெறப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் பங்காக ரூபாய் 258.85 இலட்சமும், பயனீட்டாளர்களுடைய ஒன்றியத்தின் பங்காக ரூபாய் 61.60 இலட்சமும், மேற்குறிப்பிட்ட தொகை 2009-2010 ஆம் ஆண்டுக்கு ஐந்து மொத்த பால் குளிர்விப்பான்களுக்காக செம்பிப்பாளையம், கோவில்பாளையம், துலுக்காமுத்தூர், சீமந்தாபாளையம் மற்றும் காளைப்பாளையம் ஆகிய பகுதிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 20-11-2010 அன்று ரூபாய் 81.23 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்து மொத்த குளிர்விப்பான்களில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட தாயனூர் கிராமத்தில் நிறுவப்படவுள்ள 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மொத்த குளிர்விப்பானும் அடங்கும். இந்தத் திட்டத்தின்கீழ் 5 பால் குளிர்விப்பான்கள் 2009-2010-க்கும், 2010-2011-க்கு 6 குளிர்விப்பான்களும் சேர்த்து 11 குளிர்விப்பான்கள் அமைக்கப்படவிருக்கின்றன. தற்பொழுது இவற்றுக்கு 6-1-2011 அன்று ஒப்பந்த விலைப்புள்ளி (commercial bid) விவரங்கள் சரிபார்க்கப்பட்டு, மொத்த பால் குளிர்விப்பான்களின் விலை நிர்ணயம் குறித்து பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுது, Board level tender committee ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்பட்ட பிறகு, உடனடியாக

அந்தப் பகுதியிலே பால் குளிர்விப்பான் அமைக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியில் தற்பொழுது பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படுகின்ற டாம்கோ கடன் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கப்படுகின்ற தாட்கோ கடன்கள் பல்வேறு தொழில்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே விவசாயத்தையே மூலதனமாகக்கொண்டு, அங்கு வாழ்கின்ற மக்கள் அதிகமாக ஆடு, மாடுகளை வளர்க்கின்ற காரணத்தினாலே, கறவை மாடுகளை வாங்கிக் கொடுக்கின்ற வகையிலே அரசாங்கமே முழு மானியத்தோடு, அங்கு வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும் முழுமையாக இந்தக் கடன் தொகையை வழங்கிட முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறை மூலமாக 50% மானியத்தோடு கறவை மாடுகளுக்கான கடன்கள் வழங்கப்படுகின்றன. பல்வேறு மாவட்டங்களில் அந்தக் கடன்களைப் பெற்று தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களும் பயன்பெற்று வருகிறார்கள். அதைப்போல, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக முழுமையாகக் கடன்கள் வழங்கப்பட்டு அதன் மூலமாகக் கறவை மாடுகளை வாங்கிப் பயன்பெறுகிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு) திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

[குறிப்பு:ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]